**O.S.No.49/2022**

வா.சா.1, திருமதி.தமிழ்செல்வி
நாள் : 06.08.2025 நேரம் : 12.13 PM

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 5 மற்றும் 6ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**

1)நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனது தகப்பனாருக்கு என்னுடன் சேர்த்து புஷ்பவள்ளி, வில்லம்மாள், ஆனந்தி என்ற 4 பெண் மக்கள் என்றால் சரிதான். நானும், ஆனந்தியும் இரட்டை குழந்தைகளா என்றால் சரியல்ல. எனது தகப்பனார் குடும்பமும், எனது கணவர் குடும்பமும் எட்டுசேரி கிராமம் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகளான எனது சகோதரிகளும் அதே கிராமம் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிகள் திருமணமாகி வேறு ஊருக்கு சென்றுவிட்டார்கள். நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையை நான் படித்து பார்த்து கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பிராதில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எட்டுசேரி கிராமம் என முகவரி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், திருமணம் ஆன பின்பும் எட்டுசேரியில் தான் வசித்து வருகிறார்கள்.

2)எனது தாயார் பாலம்மாள் எப்போது காலமானார் என்றால் எனக்கு 25 வயதிருக்கும் போது காலமாகிவிட்டார். எனது வழக்குரையில் நான் எனது தாயார் எனக்கு சிறு வயது இருக்கும் போதே இறந்துவிட்டார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். குடும்பத்தின் தலைகர்த்தா என்ற அடிப்படையில் என்னையும், 1 முதல் 3 பிரதிவாதிகளையும் பராமரித்ததும், படிக்க வைத்ததும் எனது தகப்பனார் தான் என்றால் சரிதான். எனது தகப்பனார் 1 முதல் 3 பிரதிவாதிகளை எனது சகோதரிகளை நல்ல முறையில் திருமணம் முடித்து வைத்து சீர், சீராட்டுதல் கொடுத்தார் என்றால் சரிதான். எனது திருமணம் எனது பெற்றோர்களுக்கோ, 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கோ விருப்பம் இல்லாமல், எனது கணவர் குடும்பத்திற்கு விருப்பமான திருமணம் என்றால் சரிதான், எனது கணவர் குடும்பத்திற்கும் விருப்பம் இல்லாமல் தான் திருமணம் நடைபெற்றது.

3)எனது கணவர் குடும்பத்தோடு எத்தனை நாட்களுக்கு பிறகு இணக்கமானோம் என்றால் சுமார் 1 வருடத்திற்கு பின்னர் இணக்கமானோம். அதன் பின்னர் எனது கணவர் வீட்டிற்கு நானும், எனது கணவரும் வந்து போவோம் என்றால் சரிதான். எனது தகப்பனார் வீட்டிற்கு திருமணமாகி எத்தனை வருடங்களுக்கு பின்னர் இணக்கமானோம் என்றால் எனக்கு 2 வது குழந்தை பிறந்த பின்னரும், எனது தாயார் இறப்பிற்கு பின்னரும் இணக்கமானோம். எனது தாயாரின் இறப்பிற்கு நான் காரியங்கள் செய்தேன் என்றால் சரிதான். எனது மகள் 14.04.2002 அன்று பிறந்தார். 2002 ம் ஆண்டு முதலே நான் எனது தகப்பனாருடனும், 1 முதல் 3 பிரதிவாதிகளுடனும் இணக்கமாக இருந்தேன் என்றால் சரிதான்.

4)எனது தகப்பனார் குடும்பத்தின் தலைகர்த்தா என்ற அடிப்படையில் தாவா சொத்தை 4 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனார் வேல்முருகனுக்கு கடந்த 8.9.1999 ம் தேதி கிரையம் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு இப்போது தான் தெரியும், எனது சகோதரிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளும் சேர்த்து தான் கிரையம் கொடுத்தார்கள். நான் மேற்படி கிரைய ஆவணத்தை பார்த்ததில்லை, கேட்டு தெரிந்து கொண்டேன். எனது குடும்ப நலனுக்காகதான் எனது தகப்பனார் 4 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தைக்கு தாவா சொத்துக்களை கிரையம் கொடுத்துள்ளார் என்றாலும் குடும்பநலனுக்காக என்று சொன்னதால் தான் 1 முதல் 3 பிரதிவாதிகளும் மேற்படி கிரைய பத்திரத்தில் கையொப்பம் இட்டார்கள் என்றாலும் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண். 534/8 பி ஆகும். மேற்படி சர்வே எண். 534/8 பி உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண். 534/8 பி 1, சர்வே எண். 534/8 பி 2, சர்வே எண். 534/8 பி3 என பிரிந்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5)தாவா சொத்து சர்வே எண். 534/8 பி 1, சர்வே எண். 534/8 பி 2, சர்வே எண். 534/8 பி3 ஆக பிரிக்கப்பட்டு சர்வே எண். 534/பி1 ல் 6 ம் பிரதிவாதி ஓட்டு வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அது எனக்கு அவர் வீடு கட்டி 3 வருடங்களுக்கு பின்னர் தான் தெரிய வந்தது. சர்வே எண். 534/8 பி 2

5ம் பிரதிவாதி 18 ஆண்டுகளுக்கு முன்பே தாரிசு வீடு கட்டி சட்ட காலத்திற்கு மேலாகவே குடியிருந்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது 5,6 பிரதிவாதிகள் வீடு கட்டியிருக்கும் விசயத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் எனக்கு எந்த பக்கம் மேற்படி வீடுகள் உள்ளது என தெரியாதது என்பதாலும் என் பாகம் எனக்கு ஒதுக்கப்பட்டிருக்கும் என்று நினைத்து கொண்டதாலும் வீடுகள் பற்றி நான் குறிப்பிடவில்லை. நான் தாவா சொத்தில் வீடுகள் இருக்கும் விவரத்தை குறிப்பிட்டால் நீதிமன்ற கட்டணம் அதிகமாக செலுத்த வேண்டும் என்பதற்காக அதை மறைத்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

6)நான் 2002ம் ஆண்டு முதலே எனது தகப்பனார் குடும்பத்திலும், மாமனார் குடும்பத்துடனும் தொடர்பில் இருந்தேன் என்றால் சரிதான். மேற்படி 2 முதல் 6 பிரதிவாதிகளின் தந்தைக்கு கிரையம் கொடுத்த விவரம் தெரியும் என்றாலும், கிரையம் பெற்ற சொத்தில் 4,5 பிரதிவாதிகள் வீடு கட்டிய விவரம் எனக்கு தெரியும் என்றாலும், அவர்கள் பங்கை பொறுத்து மட்டும் தான் கிரையம் கொடுத்தார்கள் என்று நினைத்து கொண்டேன். எனது பங்கை கிரையம் கொடுக்கவில்லை என்று நினைத்தேன். மேற்படி என்னுடைய தகப்பனாரும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் சேர்ந்து 4 முதல் 6 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு எப்போது கிரையம் கொடுத்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2005ம் ஆண்டு தான் தெரியும்.

7)அதனால் தான் 2010ம் ஆண்டு நான் பாகம் பிரிக்கப்பட்டதாக சொல்லக்கூடிய காலத்தில் மேற்படி கிரையம் பற்றி தெரிந்ததால் தான் எனது தகப்பனார் எனக்கு வேறு சன்மானம் கொடுத்து நான் மேற்படி பாகப்பிரிவினையை ஒப்பு கொண்டேன் என்றால் சரியல்ல. நான்சட்ட காலத்திற்கு பின்னர் காலதாமதமாக கோரும் பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்து வாரிசுரிமைச் சட்டம் 2005ன் படி 20.12.2004க்கு முன்பாக உரிமை மாற்றம் ஏற்பட்ட பூர்வீக சொத்தின் மீது உரிமை கொண்டாட எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா

சொத்து கிரையம் ஏற்பட்ட விவரம், வீடு கட்டிய விவரமும் சட்ட காலத்திற்கு முன்பே தெரிந்திருந்தும் அந்த உண்மையை மறைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதால் தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.50 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.08.06 14:36:29 +0530